MC.32/2025

31.10.2025

PW1 – அஷ்வினி க/பெ.சத்தியசீலன், வயது–26

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –02.58 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 03.46 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 31.10.2025

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

உங்களுக்கும் எதிர்மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 03.09.2017. எந்த தேதியிலிருந்து நீங்களும் உங்கள் கணவரும் பிரிந்திருக்கிறீர்கள் என்றால் 2021 விவாகரத்து வழக்கும் நிலுவையில் உள்ளது. நீங்களும் உங்கள் கணவரும் பிரிந்து வாழ்ந்த தேதி, மாதம் துல்லியமாக சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் குழந்தைக்கும் எனக்கும் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்துள்ளேன். உங்கள் கணவர் உங்களுக்கு எதிராக விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தான் இவ்வழக்கினை நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் உங்கள் கணவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளீர்களா என்றால் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். நீங்கள் உங்கள் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கு

வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இம்மனுவில் உங்கள் கணவர் தாக்கல் செய்த எதிருரையின் விவரம் தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. 2021–ம் நீங்கள் உங்கள் கணவரை பிரிந்த தேதியிலிருந்து உங்களுக்கிடையே பஞ்சாயத்து ஏதேனும் நடந்ததா என்றால் நடந்தது. திருமணம் நடந்த பிறகு எங்கு வாழ்ந்தீர்கள் என்றால் என் கணவர் வீட்டில் தான் வாழ்ந்தேன். அவர் அப்போது என்ன வேலை செய்தார் என்றால் திருப்பூரில் பனியன் கம்பெனியில் மேற்பார்வையாளராக என் கணவர் பணி செய்தார். அவ்வாறு உங்கள் கணவர் பணிபுரிந்த பனியன் கம்பெனியின் பெயர் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. தற்போது உங்கள் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் உங்கள் கணவருடன் திருப்பூரில் எப்போதாவது வாழ்ந்தீர்களா என்றால் என் மகன் பிறந்த சமயத்தில் வாழ்ந்தேன். அவ்வாறு எவ்வளவு காலத்திற்கு உங்கள் கணவருடன் திருப்பூரில் வாழ்ந்தீர்கள் என்றால் ஒரு வருடம். அப்போது உங்களுக்கு தேவையானவற்றை உங்கள் கணவர் வாங்கி கொடுத்தாரா என்றால் இல்லை. நீங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு வாடகை யார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன். நீங்கள் வேலைக்கு சென்று சம்பாதியம் செய்தீர்களா என்றால் இல்லை. நான் என் கணவருடன் வாழ்ந்த காலத்தில் வேலை பார்த்தேன் தற்போது தான் வேலை பார்க்கவில்லை. நீங்கள் வேலை பார்த்த காலத்தில் உங்களுக்கு ஒரு நாள் ஊதியம் என்னவென்றால் ரூ.350/– நீங்கள் திருமணம் ஆகி குழந்தை பிறந்த பிறகு எப்போது உங்கள் கணவருடன் வாழ சென்றீர்கள் என்றால் ஒன்றரை ஆண்டுகள் கழித்து சென்றேன். உங்களுக்கும் உங்கள்

கணவருக்கும் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் திருமணமாகி 3 மாதத்திலேயே பிரச்சனை ஏற்பட்டது. எப்படி பிரச்சனை ஆரம்பித்தது என்றால் என் கணவர் தன்னுடன் வேலை செய்யும் பெண்களை வீட்டிற்கு அழைத்து வந்து அவருடன் இருப்பார் அதை கேட்டதற்கு பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு என்னை அழைத்து சென்று என் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டார். நீங்கள் உங்கள் கணவருடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் தற்கொலை முயற்சி ஏதேனும் மேற்கொண்டீர்களா எனறால் இல்லை. உங்கள் கணவரை பிரிந்து நீங்கள் வந்தபோது மீண்டும் எப்போது அழைத்து சென்றார் என்றால் இரண்டு தினம் கழித்து இரண்டு பெண்கள் சென்ற பின்னர் என்னை அழைத்துச் சென்றார். அதற்கு பிரச்சனை ஏதேனும் ஏற்பட்டதா என்றால் அதே பிரச்சனை தான். அதன் பின்னர் அதே பெண்களை அழைத்து வந்து பக்கத்தில் ஒரு வீட்டை எடுத்து அவர்களை அங்கு தங்க வைத்தார். நான் கேட்டதற்கு உனக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லிவிட்டார். 2021–ல் நீங்கள் பிரிந்து வந்தபோது எப்படி உங்கள் வீ்டிற்கு சென்றீர்கள் என்றால் என் கணவர் தான் என்னை அங்கு கொண்டு விட்டுவந்தார். பஞ்சாயத்து பேசியது தவிர வேறு ஏதேனும் நடவடிக்கைகள் உங்கள் கணவருக்கு எதிராக எடுத்தீர்களா என்றால் இல்லை. உங்கள் கணவர் உங்களுக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுகள் சொல்லுகிறார் என்றால் தெரியாத நபர்களுடன் நான் தொலைபேசியில் பேசுவதாக என் மீது குற்றம் சாட்டினார். அவ்வாறு நீங்கள் எதாவது பேசினீர்களா என்றால் இல்லை. நீங்கள் பிரிந்து வந்த பிறகு பஞ்சாயத்து நடந்ததாக சொல்லுகிறீர்கள் அந்த பஞ்சாயத்தில் யார் யார் பங்ககேற்றார்கள் என்றால் அப்பா, சித்தப்பா

ஆகியோர் பஞ்சாயத்தில் பங்கேற்றார்கள். மற்ற பங்கேற்பாளர்களின் விவரம் எனக்கு தெரியாது. அந்த பஞ்சாயத்தில் நடந்த பேச்சுவார்த்தை குறித்து உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. பின்னர் உங்கள் அப்பாவிடம் பேச்சுவார்த்தை குறித்து கேட்டு தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. உங்கள் கணவர் பனியன் கம்பெனியில் 12 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பனியன் நிறுவனத்தில் வேலை செய்வதாக சொல்லியுள்ளீர்கள் அந்த பனியன் கம்பெனியில் திருமணத்திற்கு முன்பு 12 ஆண்டுகளா அல்லது திருமணத்திற்கு பின்பா என்றால் திருமணத்திற்கு முன்பு தான். திருமணம் முடிவு செய்த பின்பு தான் உங்களுக்கு உங்கள் கணவரை தெரியுமா அல்லது திருமணம் ஏற்பாடு செய்வதற்கு முன்னரே தெரியுமா என்றால் திருமணம் முடிவு செய்த பின்பு தான் என் கணவரை எனக்கு தெரியும். உங்கள் கணவர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் ஜீவனாம்சம் கோரி நீங்கள் இடைநிலை மனு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கில் உங்களுக்கு ஜீவனாம்சம் வழங்க உத்தரவாகி இருந்தது என்றால் சரிதான். எனக்கு மாதம் ரூ.3000/- என் குழந்தைக்கு மாதம் ரூ.2000/- வழங்க உத்தரவாகியிருந்தது. சாட்சி மீண்டும் ரூ.5000/- ஜீவனாம்சம் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது என்று தாமாக முன்வந்து சொல்கிறார். ஜீவனாம்ச தொகை அந்த வழக்கில் எவ்வளவு வாங்கியிருக்கிறீர்கள் என்றால் எனக்கு தெரியாது. தோராயமாக உங்களால் சொல்ல முடியுமா என்றால் ரூ.1,00,000/- ஜீவனாம்சம் தொகையாக விவாகரத்து வழக்கில் பெற்றேன். 2-ம் மனுதாரர் என்ன வகுப்பு படிக்கிறார் என்றால் 3-ம் வகுப்பு, விநாயகா மெட்ரிக்குலேசன் பள்ளியில் படிக்கிறார். உங்கள் குழந்தையின் பள்ளிக்கட்டணம் நீங்கள்

செலுத்தி வருகிறீர்களா என்றால் என் பெற்றோர்கள் செலுத்தி வருகிறார்கள். இந்த ஆண்டிற்கான பள்ளிக்கட்டணம் உங்கள் குழந்தைக்கு உங்கள் பெற்றோர்கள் தான் செலுத்தினார்களா என்றால் ஆமாம். உங்கள் பள்ளிக்கட்டண ரசீதுகள் யார் வசம் உள்ளது என்றால் ரசீதுகள் தருவதில்லை. நீங்கள் ரூ.1,00,000/– ஜீவனாம்ச தொகை விவாகரத்து வழக்கில் பெற்றதற்கு பள்ளிக்கட்டணம் ஏதேனும் உங்கள் குழந்தைக்கு செலுத்தினீர்களா என்றால் இல்லை. உங்கள் குழந்தைக்கு அந்த தொகையிலிருந்து வங்கியில் ஏதேனும் வைப்பீடு செய்தீர்களா என்றால் இல்லை. அந்த தொகை உணவுக்கு மட்டுமே சரியாக இருந்தது. உங்களிடம் காட்டப்படுவது விவாகரத்து வழக்கின் உத்தரவு நகல் அதில் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.3000/– குழந்தைக்கு மாதம் தலா ரூ.2000/–இடைகால ஜீவனாம்சமாக மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரையில் செலுத்தவேண்டும் எனவும் வழக்கு செலவு தொகையாக ரூ.3000/– என உத்தரவு வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி இடைநிலை மனு எண்.01/2022, 26.06.2023 தேதியிடப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1. உங்கள் கணவர் உங்களிடம் இடைகால ஜீவனாம்ச தொகையாக ரூ.1,70,000/–க்கும் கூடுதலாக செலுத்தியுள்ளார் என்று சொன்னால் என்னால் துல்லியமாக சொல்ல முடியாது. அவ்வாறு செலுத்திய தொகையில் உங்கள் மகனுக்கு பள்ளிக்கட்டணம் செலுத்தாமல் நீங்களே ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் 11.01.2021 அன்று பிரச்சனை ஏற்பட்டபோது நீங்களே திருப்பூரிலிருந்து உங்கள் தாய் வீட்டிற்கு வந்துவிட்டீர்கள் எனவும் நீங்கள்

செய்த தவறை உங்களது கணவர் உங்கள் தகப்பனாரிடம் சொல்லிவிடுவார் என்று எண்ணி தற்கொலை முயற்சி செய்தீர்கள் என்றால் சரியல்ல. உங்களை உங்களது வீட்டார் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு ஜோலார்பேட்டை காவல் நிலையத்தார் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. அந்த விசாரணையின்போது நீங்கள் நடந்த தவறுக்கு பொறுப்பேற்றுக்கொண்டு உங்கள் கணவருக்கும் நீங்கள் செய்த தவறுக்கும் தொடர்பில்லை என்று சொல்லிவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவருடன் வாழ்ந்த காலத்தில் ஏற்கனவே நீங்கள் தற்கொலை முயற்சி செய்து தருமபுரி அரசு மருத்துவமனையில் சுமார் ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு திருமணமான காலத்தில் நீங்கள் உங்கள் ஆண் நண்பர்களுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டும் காணொளி (Video call) மூலமாக பேசிக்கொண்டும் இருந்து அதை உங்கள் கணவர் தட்டிக்கேட்டதற்காக மட்டுமே உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையின்போது உங்கள் கணவர் குறிப்பிட்டு சொல்லியும் உங்கள் தகப்பனார் அதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் இதுநாள் வரைக்கும் உங்களுடைய நடவடிக்கையில் மாற்றம் எதுவும் செய்யாத காரணத்தினால் தான் உங்கள் கணவர் உங்களுக்கு எதிராக விவாகாரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. ஒரு இந்து மனைவி கணவருக்கு செய்ய வேண்டிய கடமைகள் எதுவும் செய்ய தவறிவிட்டீர்கள் என்றால் சரியல்ல. சட்டப்படி

உங்கள் கணவர் உங்களுக்கு ஜீவனாம்ச தொகை வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு 1–ம் மனுதாரர் பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K
ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.10.31 16:41:58 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.